**முதன்மை மாவட்ட உரிமையியல் நீதிமன்றம், குளித்தலை**

**முன்னிலை:– திருமதி.R.தமிழரசி**, B.A.,B.L.,

**முதன்மை மாவட்ட உரிமையியல் நீதிபதி, குளித்தலை,**

**2025 ஆம் ஆண்டு அக்டோபர் திங்கள் 07 ம் நாள் செவ்வாய்க்கிழமை**

**I.A.No.04/2025 In O.S.No.27/2023**

த. ராஜேந்திரன் ... மனுதாரர்/வாதி

**//எதிராக//**

ப. அண்ணாதுரை ... எதிர்மனுதாரர்/பிரதிவாதி

இம்மனு என் முன்பாக 26.09.2025 ஆம் தேதி இறுதியாக விசாரணைக்கு வந்த போது மனுதாரர் தரப்பில் வழக்கறிஞர் திரு.M,குமார் அவர்கள் முன்னிலையாகியும், எதிர்மனுதாரர் தரப்பில் வழக்கறிஞர் திரு.T.இரத்தினம் அவர்கள் முன்னிலையாகியும், இரு தரப்பிலும் எடுத்துரைத்த வாதங்களை கேட்டும், வழக்கு ஆவணங்களை பரிசீலனை செய்தும் இன்று இந்நீதிமன்றம் பிறப்பிக்கும்

**உத்தரவு**

இம்மனுவானது மனுவில் கண்ட சாட்சிகளுக்கு அழைப்பாணை அனுப்ப அனுமதிக்கக்கோரி உரிமையியல் விசாரணை நடைமுறைச்சட்டம் கட்டளை 16 விதி 1–ன் கீழ் தாக்கல் செய்யப்பட்டுள்ளது.

**மனுதாரர் தரப்பு மனுவின் சுருக்கம்**

1) மனுதாரர் இவ்வழக்கின் வாதி. இவ்வழக்கு வாதி தரப்பு கூடுதல் சாட்சியத்திற்காக வாய்தா போடப்பட்டுள்ளது. மனுதாரர் தன் தரப்பில் கூடுதல் சாட்சியாக மனுவில் கண்ட நபர்களை கேட்ட போது அவர்கள் நீதிமன்றத்தில் இருந்து அழைப்பாணை வந்தால் மட்டுமே சாட்சியம் அளிக்க வருவோம் என கூறிவிட்டனர். மேற்படி சாட்சிகள் தன் தரப்பு கட்சியை நிரூபிக்க அவசியம் என்றும் எனவே மேற்படி சாட்சிகளை விசாரிக்க அனுமதி அளிக்கக் கோரி இம்மனுவை தாக்கல் செய்துள்ளார்.

**எதிர்மனுதாரர் தாக்கல் செய்துள்ள எதிருரையின் சுருக்கம்**

2) மனுவில் கண்ட சாட்சிக்கும், தாவா சொத்திற்கும் எவ்வித தொடர்பும் இல்லை. மேற்படி சாட்சிகள் தாவா சொத்து இருக்கும் ஊரிலேயே இல்லை. வேண்டுமென்றே இவ்வழக்கிற்கு சம்பந்தப்படாத சாட்சிகளை பொய்யாக சாட்சி அளிக்க மனுதாரர் முயற்சித்து வருகிறார். எனவே இந்த மனு தள்ளுபடி செய்யப்பட வேண்டும்.

3) தற்போது தீர்மானம் செய்யப்பட வேண்டியது இம்மனு அனுமதிக்கப்படத்தக்கதா? இல்லையா? என்பதே ஆகும்.

**<u>தீர்வு</u>**

4) இருதரப்பு வாதமும் கேட்கப்பட்டது. மனுதாரர் தரப்பில் மனுவில் கண்ட சாட்சிகளை சாட்சியம் அளிக்க அனுமதி கோரி வாதிடப்பட்டது. எதிர்மனுதாரர் தரப்பில் மேற்படி சாட்சிகளுக்கும், தாவா சொத்திற்கும் சம்பந்தம் இல்லை என ஆட்சேபனை செய்யப்பட்டது. மேற்படி சாட்சிகளை விசாரித்தால் தான் தன் தரப்பு வாதத்தை நிரூபிக்க முடியும் என்று மனுவில் கூறியுள்ளார். மேலும் மேற்படி சாட்சிகள் நீதிமன்றத்தில் இருந்து அழைப்பாணை அனுப்பினால் தான் சாட்சி அளிக்க வருவதாக வாதுரைத்தார். மேற்படி வாதம் ஏற்கத்தக்கதாக உள்ளது. மேலும் இந்த மனுவை அனுமதித்தால் எதிர்மனுதாரருக்கு எவ்வித இழப்பும் ஏற்படாது என இந்நீதிமன்றம் கருதுகிறது.

**இறுதியாக**

இம்மனு அனுமதித்து உத்தரவிடப்படுகிறது. செலவுத்தொகை இல்லை.

இவ்வுத்தரவானது என்னால் சுருக்கெழுத்து தட்டச்சருக்கு நேரடியாக சொல்லப்பட்டு, அவரால் குறிப்பெடுக்கப்பட்டு, கணினியில் தட்டச்சு செய்யப்பட்டு என்னால் படித்து சரிபார்க்கப்பட்டு பிழைகள் திருத்தம் செய்யப்பட்டு இன்று 2025ம் ஆண்டு அக்டோபர் திங்கள் 07ம் நாள் அவையறிய பகரப்பட்டது.

R TAMILARASI — Digitally signed by R TAMILARASI

**முதன்மை மாவட்ட உரிமையியல் நீதிபதி,**
**குளித்தலை.**

**<u>மனுதாரர்கள் தரப்பு சாட்சி மற்றும் சான்றாவணங்கள்</u>**

-இல்லை-

**<u>எதிர்மனுதாரர்கள் தரப்பு சாட்சி மற்றும் சான்றாவணங்கள்</u>**

-இல்லை-

R TAMILARASI — Digitally signed by R TAMILARASI

**முதன்மை மாவட்ட உரிமையியல் நீதிபதி,**
**குளித்தலை.**

**************************************
முதன்மை மாவட்ட உரிமையியல் நீதிமன்றம்
குளித்தலை

I.A.No. 04/2025
in
O.S.No. 27/2023

DRAFT / FAIR ORDER

D.D.07.10.2025
**************************************